# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

(2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2004. பெப்புருவரி மாதம் 6 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 13.75 தபாற் செலவு : ரூபா 6.75

# 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 59/2002
4654

## தேசிய அரசுப் பேரவையின் 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தேசிய அரசுப் பேரவையின் 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தின் முன்னுரையைத் திருத்துதல்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும்) தேசிய அரசுப் பேரவையின் 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை நூலகக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் முன்னுரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் முன்னுரை இடப்படுகின்றது :—

> "நூலக ஆவணப்படுத்துகை மற்றும் தகவற் சேவைகளினதும் அவற்றோடு தொடர்புபட்ட விடயங்களினதும் கற்கையையும் செயல்முறையையும் முன்னேற்றுவதற்காகவும் ; நூலக அறிவியல் ஆவணப்படுத்துகை மற்றும் தகவல் அறிவியலின் கற்கையையும் கற்பித்தலையும் ஒழுங்குபடுத்துவதற்கும், அபிவிருத்திசெய்வதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் ; நூலகர் பொறுப்பாளர் என்ற உயர்தொழிலினதும் மற்றும் தகவல் அறிவியலினதும் அந்தஸ்தையும், அக்கறைகளையும், சேமநலத்தையும் ஆதாரப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் ; அத்துடன் "இலங்கை நூலகக் கழகத்துடன்" தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் அதன் உறுப்பினர்களினால் உடன்பாட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கப் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காகவும் "இலங்கை நூலகக் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று இலங்கையில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது, அது எந்தக் குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டு நடாத்தியுள்ளதாதலாலும், சொல்லப்பட்ட கழகமானது கூட்டிணைக்கப்படுவது இப்போது விரும்பத்தக்கதாகவுள்ளதாதலாலும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

"கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை.

3. (1) (அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையானது, கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களையும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள் முழு உறுப்பினர்களையும் இணையுறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகள் இருத்தலும் வேண்டும் ;

(இ) கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களுக்கு (கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களாகவிருப்பதற்குத் தகவில்லாத ஆட்களுக்கு) வாக்களிக்கும் உரிமைகள் எவையும் இருத்தலாகாது.

(2) பேரவையானது, விதிகளின்மூலம், பின்வருவனவற்றைக் குறித்துரைக்கலாம் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஆ) உறுப்பாண்மைக்கான விண்ணப்பத்திற்கான படிவம் ;

(இ) விண்ணப்பக் கட்டணம் ;

(ஈ) உறுப்பாண்மைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான படிவமும் நிபந்தனைகளும் ;

(உ) உறுப்பினர்கள் பற்றிய இடாப்பைப் பேணுவதற்கான முறை ;

(ஊ) எவையேனும் மேலதிகக் கட்டணங்களைச் செலுத்துதல் உறுப்பாண்மைக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல் அல்லது குறைத்தல் ;

(எ) உறுப்பாண்மைக் கட்டணத்தைச் செலுத்தாமையின் விளைவு ;

(ஏ) உறுப்பினர்களின் உரிமைகளும், சிறப்புரிமைகளும், கடமைகளும், உறுப்பாண்மைக்கான நிபந்தனைகளும்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக ஏது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் எத்தகையதுமான எந்த வகுப்பிலும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாகவிருந்த ஆட்கள் எல்லோரும், எல்லா நோக்கங்களுக்குமாகவும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து, அதே வகுப்பில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்.

4. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இலங்கையில் நூலக, ஆவணப்படுத்துகை, மற்றும் தகவற் சேவைகளைத் தாபித்தலும், பேணுதலும், மேம்படுத்து

தலும், அத்தகைய சேவைகளுக்காக உயர்தொழில்சார் நியமங்களைத் தாபித்தலும் ;

(ஆ) நூலக, ஆவணப்படுத்துகை, மற்றும் தகவற் சேவைகளின் எல்லா அம்சங்களையும் திட்டமிடுதலுடனும், நிகழ்ச்சித் திட்டமிடுதலுடனும், மற்றும் அபிவிருத்தி செய்தலுடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைதலும், ஒத்துழைத்தலும் ;

(இ) நூலக, அறிவியல் ஆவணப்படுத்துகை மற்றும் தகவற் சேவைகள் என்ற துறையில் உயர்தொழில்சார் மதியுரையை அளித்தலும், அத்துறையில் புதிய தொழினுட்பங்களின் பயன்பாட்டை மேம்படுத்துதலும், வசதிப்படுத்துதலும், அதில் உதவுதலும் ;

(ஈ) நூலக அறிவியல் ஆவணப்படுத்துகை மற்றும் தகவற்சேவை என்பன தொடர்பாகக் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றை ஏற்பாடுசெய்தலும், அவற்றில் அக்கறைகொண்டுள்ள ஆட்களின் பங்குபற்றுகையை ஊக்குவித்தலும் வசதிப்படுத்துதலும் ;

(உ) நூலகப் பொறுப்பாளர்களினதும் தகவல் அறிவியலாளர்களினதும் உரிமைகளையும், சிறப்புரிமைகளையும், அந்தஸ்தையும், அக்கறைகளையும், சேமநலத்தையும் காத்தலும், பாதுகாத்தலும், மேம்படுத்துதலும் ;

(ஊ) உயர்தொழில்சார் நூலகப் பொறுப்பாளர்களாகவும் தகவல் அறிவியலாளர்களாகவும் தகைமைபெறுவதற்கு விரும்புகின்ற ஆட்களின் கல்வியையும் பயிற்சியையும் ஏற்பாடுசெய்தலும், நடாத்துதலும், கட்டுப்படுத்துதலும், அந்நோக்கத்துக்காகத் தோதான கற்கை நெறிகளை விதித்துரைத்தலும், அங்கீகரித்தலும், ஏற்றங்கீகரித்தலும் :

(எ) நூலக அறிவியல் மற்றும் தகவல் அறிவியல் சேவைகளும் பற்றிய கற்கையையும், கற்பித்தலையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துதலும், வசதிப்படுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு தேசிய மற்றும் சர்வதேசத் தாபனங்களுடனும் கழகங்களுடனும் ஒத்துழைத்தலும், ஒருங்கிணைதலும் ;

(ஐ) நூலக மற்றும் தகவல் சேவைகளில் ஈடுபட்டுள்ள எல்லோரையும் ஒன்றிணைத்தலும், அவர்களிடையே ஒருங்கிணைப்பையும் தோழமையையும் மேம்படுத்துதலும் ;

(ஒ) இலங்கையிலுள்ள நூலகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துதலும் ;

(ஓ) நூலகத் தகவல் மற்றும் ஆவணப்படுத்துகை அறிவியல் பற்றிய வெளியீடுகளைச் சேகரித்தலும், நூலகமொன்றையும் ஆவணப்படுத்துகை நிலையமொன்றையும் பேணுதலும் ;

(ஔ) கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்காக நடத்தை மற்றும் ஒழுக்கநெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதலும், அத்தகைய கோவையின் செயற்பாட்டைக் கண்காணித்தலும் ; அத்துடன்

(க) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது அதற்கு உகந்தவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது, அதன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) கீழே குறித்துரைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பதவி தாங்குநர்கள், அவர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்க அதன் உறுப்பினர்களிடையேயிருந்து கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அல்லது ஒரு விசேட பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் :—

(i) தலைவர்

(ii) தெரிவுசெய்யப்பட்ட தலைவர்

(iii) துணைத்தலைவர்

(iv) பொதுச் செயலாளர்

(v) உதவிப் பொதுச் செயலாளர்

(vi) பொருளாளர்

(vii) கல்வி அலுவலர்

(viii) உதவிக் கல்வி அலுவலர்

(ix) வெளியீட்டு அலுவலர்

(x) தகவல், பொதுமக்கள் உறவு அலுவலர்.

(ஆ) பேரவையின் உடனடிக் கடந்தகாலத் தலைவர்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் :—

"(அ) ஒழுக்காற்றுக் குழுக்களையும் நிலையியற் குழுக்களையும், பேரவையானது அவசியமெனக் கருதுகின்றவாறான வேறு குழுக்களையும் அமைத்தலும் ;

(ஆ) விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும், நடத்தை மற்றும் ஒழுக்கநெறிக் கோவைக்கும் சேர்க்கைகள், மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் என்பவற்றைச் செய்தல் தொடர்பில் கூட்டுத்தாபனத்துக்கு விதப்புரைகளைச் செய்தலும் ;";

(2) அவ்வுட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ) மற்றும் (ஔ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :—

"(ஐ) புலமைப்பரிசில்களையும், பதக்கங்களையும், அவசியமாகக்கூடியவாறாக வேறு சிறப்புத் திறமைகளுக்கான அளிப்புக்களையும் வழங்குதலும் அத்தகைய நோக்கத்துக்காக ஒரு விசேட நிதியத்தை உருவாக்குதலும் ;

(ஒ) வேறு நிறுவனங்களினால் நடாத்தப்படும் நூலக மற்றும் தகவல் அறிவியல் பாடநெறிகளினதும் பரீட்சைகளினதும் அங்கீகரிப்பிலும் ஏற்றங்கீகரிப்பிலும், நூலகப் பொறுப்பாளர் என்ற உயர்தொழிலும் தகவல் அறிவியலும் தொடர்பான வேறேதேனும் கருமம் பற்றியும் மதியுரையளித்தலும் ;

(ஓ) நூலக அறிவியல், ஆவணப்படுத்துகை மற்றும் தகவல் அறிவியல் என்பவற்றிலான பரீட்சகர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், தொலைக்கல்வி பாடநெறிகளைத் தயாரிக்கின்ற ஆட்களுக்கும் கூட்டுத்தாபனத்தினாற் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானித்தலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களினது உரிமைகளையும், தத்துவங்களையும், பணிகளையும், சிறப்புரிமைகளையும் தீர்மானித்தலும் ;."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(அ) கீழே குறித்துரைக்கப்பட்ட பதவிதாங்குநர்கள்

(i) தலைவர் ;
(ii) தெரிவுசெய்யப்பட்ட தலைவர் ;
(iii) துணைத்தலைவர் ;
(iv) பொதுச் செயலாளர் ;
(v) உதவிப் பொதுச் செயலாளர் ;
(vi) பொருளாளர் ;
(vii) கல்வி அலுவலர் ;
(viii) உதவிக் கல்வி அலுவலர் ;
(ix) வெளியீட்டு அலுவலர் ;
(x) தகவல், பொதுமக்கள் உறவு அலுவலர்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஐ) கூட்டுத்தாபனத்தின் துணையுறுப்பாண்மைகளையும் இணையுறுப்பாண்மைகளையும் வழங்குவது தொடர்பாகப் பேரவைக்கு விதப்புரைகள் செய்தலும் ;".

(2) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை அதன் (ங) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(க) புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் வேறு சிறப்புத்திறமைக்கான அளிப்புக்கள் என்பவற்றை வழங்குவது தொடர்பாகப் பேரவைக்கு விதப்புரைகளைச் செய்தலும் ; அத்துடன்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, அப் பிரிவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவாக மீள இலக்கமிடுதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்தல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 12, 13, 14, 15 மற்றும் 16 என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12.13.14.15 மற்றும் 16 என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

உறுப்பாண்மைக்கான தகைமையீனமும் ஒழுக்காற்றுத் தத்துவங்களும் நடவடிக்கை முறையும்.

12. (1) ஆளெவரும் பின்வருமாறிருப்பின் கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படுதலாகாது :—

(அ) சித்தசுவாதீனமற்றவரென இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அவருக்கு நீதித்தீர்ப் பளிக்கப்பட்டிருப்பின் ;

(ஆ) கடனிறுக்க வகையற்றவரென அல்லது வங்கிமுறிந்தவரென இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நீதித்தீர்ப்பளிக்கப்பட்டிருந்து, அவரது கடனிறுக்க வகையற்றமை அல்லது

வங்கி முறிந்தமை தவிர்க்கமுடியாத இழப்புகளினால் அல்லது துரதிஷ்டவசத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் எழுந்துள்ளதென்று பொருள்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நீதிமன்றத்தினால் அவருக்கு அளிக்கப்பட்டிராவிடின் ; அல்லது

(இ) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால், ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட தவறுக்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும் மூன்று மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்குக் கடூழிய மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான ஏதேனும் தவறுக்கு அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட தகைமையீனங்களுள் எவற்றுக்கும் அமைந்தவராக வருகின்ற கூட்டிணைக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பேரவையானது பெயரகற்றுதல் வேண்டும் : ஆயின், எவ்வாறாயினும், பேரவையானது அதன் தற்றுணிபின்படி, அத்தகைய ஆள் அத்தகைய தகைமையீனத்துக்கு அமைந்தவராக இல்லாதொழியும்போது அவரை மீள அனுமதிக்கலாம்.

(3) பேரவையானது, அதன் அபிப்பிராயப்படி உயர்தொழில்சார் துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருந்த கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பெயரகற்றலாம். "உயர்தொழில்சார் துர்நடத்தை" என்பது, அப்போதைக்கு வலுவிலுள்ள, இலங்கை நூலகக் கழகத்தின் உயர்தொழில்சார் நடத்தை, ஒழுக்கநெறிக்கோவையை மீறுகின்ற ஏதேனும் செயல் அல்லது செய்யாமை என்று பொருளாகும் ;

ஆயின், எவ்வாறாயினும், பேரவையானது, பெயரகற்றுதலுக்குப் பதிலாக, அத்தகைய உறுப்பினரைக் கண்டிக்கலாம் அல்லது சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு பேரவையானது நீதியானதும் ஒப்புரவானதும் எனக் கருதக்கூடியவாறானதும், ஓராண்டை விஞ்சாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு அவரை உறுப்பாண்மையிலிருந்து இடை நிறுத்தலாம்.

(4) பேரவையானது, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரை, அத்தகைய உறுப்பினர் மேற்கூறப்பட்ட தகைமையீனங்களுள் எவற்றுக்கும் அமைந்தவராக வந்துள்ளாரென அல்லது உயர் தொழில்சார் நடத்தைக்குக் குற்றவாளியாக விருந்துள்ளாரென, பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக்குழுவொன்று விசாரணையின் பின்னர் பேரவைக்கு அறிக்கையிட்டிருந்தாலொழிய, பெயரகற்றுதலாகாது, உறுப்பாண்மையிலிருந்து இடை நிறுத்தலாகாது அல்லது கண்டித்தலாகாது.

(5) பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவொன்று, எவரேனுமாள் பற்றி அல்லது எதேனும் ஒழுங்கமைப்புப் பற்றி எவரேனும் உறுப்பினரின் சான்று, அல்லது எவரேனும் உறுப்பினரினால் எதேனும் ஆவணம் காண்பிக்கப்படுதல் அத்தகைய விசாரணைக்கு இசைவானதாக அல்லது அவசியமானதாக இருக்குமென அபிப்பிராயப்படுமிடத்து, சான்றளிக்கப்படுவதற்கென அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கென, அது, எழுத்திலானவோர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் வருகைதரும்படி அத்தகைய ஆளை அத்தகைய அறிவித்தல்மூலம் தேவைப்படுத்துவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(6) எந்தக் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பில் ஒழுக்காற்றுக் குழுவொன்று முடிவெடுப்பொன்றைச் செய்துள்ளதோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர், அத்தகைய முடிவுக்கெதிராகப் பேரவைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

கணக்காய்வும் கணக்குகளும்.

13. (1) பேரவையானது, கூட்டுத்தாபனத்தின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றித் தகுந்த புத்தகங்களும் கணக்குகளும் வைத்திருக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், இலங்கையில் பட்டயம்பெற்ற கணக்காய்வாளர்களாகத் தொழில்புரிவதற்குத் தகைமையுள்ள ஆளொருவரினால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் கணக்காய்வு செய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன், அவர்கள், அத்தகைய நோக்கத்துக்காக கூட்டுத்தாபனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

பதவிப் பெயர்களின் பயன்பாடு.

14. (1) கழகத்தின் செயற்பாட்டு உறுப்பினர் ஒவ்வொருவரும், "பட்டய நூலகர்" என்ற பதவிப் பெயரைப் பயன்படுத்த உரித்துடையவராதல் வேண்டும். இணையுறுப்பினர் அவரது பெயருக்குப்பின் "எப்.எல்.ஏ. (இலங்கை)" என்ற முதலெழுத்துக்களையும் கூட்டுறுப்பினர் ஒருவர் "ஏ.எல்.ஏ. (இலங்கை)" என்ற முதலெழுத்துக்களையும் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டவாறு தவிர, ஆளெவரும் அல்லது ஆட்கள் குழு எதுவும் "பட்டய நூலகர்" என்ற பதவிப் பெயரையோ அல்லது "எப்.எல்.ஏ. (இலங்கை)" அல்லது "ஏ.எல்.ஏ. (இலங்கை)" என்ற முதலெழுத்துக்களையோ பயன்படுத்துதல் ஆகாது.

(3) இரண்டாம் அட்டவணையின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தண்டம்.

15. (1) இச்சட்டத்தின் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவரினால் நடாத்தப்படும் விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆறு மாதங்களை விஞ்சாததொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

பொது இலச்சினை.

16. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தீர்மானத்தின்மூலம் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வடிவத்தையும், அளவையும், வடிவமைப்பையும் உடையதாதல் வேண்டும்.

(2) பேரவையானது அத்தகைய இலச்சினையின் காப்பான கட்டுக்காப்புக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இலச்சினையானது, தீர்மானத்தின்மூலம் பேரவையால் காலத்துக்குக்காலம் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறு, அதன் அலுவலர்களில் இருவரின் முன்னிலையில் உறுதிகளிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலர்கள், தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்கடையாளமாக அது பொறிக்கப்பட்டதை அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.